சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி:18.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 2/2026 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | பிரவீன் |
| தந்தை பெயர் | : | பொம்முராஜ் |
| கிராமம் | : | அணைபட்டி |
| தாலுக்கா | : | உத்தமபாளையம் தாலுக்கா,<br>தேனி மாவட்டம் |
| தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |
| வயது | : | 31 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கொரடாச்சேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த

03.11.2025 ஆம் தேதி நான் நிலைய பொருப்பிலிருந்தபோது திருவாரூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் மருத்துமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வீரையன் மகன் அ.சா-1 அன்புச்செல்வம் என்பவரை விசாரித்து அ.சா.ஆ-1 ஆன புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண். 281/2025 -ல் சட்டப்பிரிவுகள் 296(b). 118(1), 351(3) of BNS r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை ஒன்றை நான் இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேலும் இந்த வழக்கு பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வழக்கு என்பதால் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் விசாரணைக்கு வழக்கு ஆவணங்களை முன்னிலைப்படுத்தினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

03.11.2025 ஆம் தேதி திருவாரூர் அரசு மருத்துவமனையில் இருந்து யாரால் தகவல் கொடுக்கப்பட்டது என்றும், எந்த நேரத்தில் தகவல் கொடுக்கப்பட்டது என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். எனது காவல் நிலையத்திலிருந்து திருவாரூர் நீதிமன்றத்திற்கு 20 நிமிடத்தில் வந்துவிடலாம் என்று சொன்னால் இரு சக்கர வாகனத்தில் வந்தால் வந்துவிடலாம். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதி 02.11.2025 என்று சொன்னால் சரிதான். மருத்துவமனையில் அதே தேதியில் தான் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். நான் அ.சா.ஆ-9 ஆன முதல் தகவல் அறிக்கையை 03.11.2025 ஆம் தேதி பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை கால தாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளதற்கு காரணம் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் முதல் தகவல் அறிக்கையை நான் கால தாமதமாக பதிவுசெய்யவில்லை. முதல் தகவல் அறிக்கை கால தாமதமாக தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், நான் அதை மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் புகார் வாக்குமூலம் பெற்ற பின்னர் சம்பவம் இடம் சென்று விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் ஆமாம். அ.சா-1 என்னிடம்

அ.சா.ஆ-1 ஆன புகார் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு செல்லாமலும், அந்த நேரத்தில் நான் பணியில் இருந்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி மீது எண்கண் பகுதியை சேர்ந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஒன்றிய செயலாளர் சுந்தரமூர்த்தி அவர்களின் தூண்டுதலின் பேரில் கொடுக்கப்பட்ட அ.சா.ஆ-1 ஆன புகார்வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், அ.சா-1 கொடுத்த அ.சா.ஆ-1 ஆன புகார்வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்துள்ளேன். யாருடைய தூண்டுதலின் அடிப்படையிலும் வழக்கு பதிவு செய்யவில்லை. மேற்படி சுந்தரமூர்த்தி தூண்டுதலின் பேரில் தான் அ.சா-1 புகார்வாக்குமூலம் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.18 18:04:12 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.